# தலைமலை கண்ட தேவர்

## காட்சி—ஒன்று

இடம் : பாண்டிநாட்டு நாயினர் கோயிலைச் சேர்ந்த தேனூர் விடுதி.

காலம் : விடியும் வேளை

உறுப்பினர் : தலைமலை கண்ட தேவர் என்னும் கண்ணிலாப் பாவலர், தானப்பன், அவன் மனைவி.

### காட்சியின் தலைப்பு

### கை தொட்டது மனம் தொடவில்லை

நிகழ்ச்சி : தானப்பனும் அவன் மனைவியும் விடுதியில் ஒரு புறம் படுத்துறங்கினர். கண்ணில்லாத பாவலராகிய தலைமலை கண்டதேவர் அவர்களின் அண்டையில் வந்து படுத்துறங்கினர். புரண்டு படுத்த பாவலர் கை, தானப்பன் மனைவி மேல் பட்டுவிட்டது.

மனைவி : (திடுக்கிட்டுக் கணவனைத் தட்டி) இங்கே பாருங்கோ எவனோ மேலே கையைப் போடுறான்.

தானப்பன் : டேய்! ஆர் நீ! ஏன் தொட்டே? வெட்டிப்புடு வேன் தானப்பண்டா நான்.

பாவலர் :

தேனூர் விடுதியிலே சேயிழையும் நீயும்நல்
ஊனும் உயிராய் உறங்குவதை—நானறியேன்
தொட்டதென்கை தானப்பா தொட்டதில்லை நெஞ்சப்பா
வெட்டுவதென் றால்வெட்டப் பா.

தானப்பன் : ஓகோ! தற்செயலா கைதொட்டுட்டுதாம்; மனம் தொடலியாமே! வருத்தப்படாதே பாட்டே பண்ணுமே எண்ணுமே பாய்ச்சுகிறார் பார்டி.

மனைவி : சின்ன வெளக்கா இருந்தாலும் சிமுக்கு சிமுக்குண்ணு எரியறப்போ தெரியாமையா பூடும் பக்கத்தே படுத்திருக்கிறது?

பாவலர் :

சின்னவிளக் குண்டென்றாய் தீர்ந்விந்த கண்என்கண்
என்ன விளக்கிடினும் ஏதறியும்—என்னிலையை
என்னப்பா தானப்பா நம்பவில்லை என்றால் என்
கண்ணைப் பார்த்துப்பொறப் பா

தானப்பன் : பொறுத்துக்கிட்டேன் ஐயா, பொறுத்துக் கிட்டேன். கண்ணில்லாதவர்டி, கண்ணில்லாதவர்.

மனைவி : ஐயே இரக்கமாயிருக்குது பாக்கப் பாக்க! (இதற்கு பாவலரைத் தேடிக்கொண்டு திண்ணத் தேவன் வந்து விடுகிறான்.)

திண்ணன் : கூத்தர் வீட்டுக்குப் போனேன். நீவீர் கூத்து முடிந்தவுடன் கிளம்பிவிட்டதாகச் சொன்னார்கள்; இங்கு வந்தேன். இங்கு வந்த நீர் சிறிது தொலைவில் உள்ள வீட்டுக்கே வந்து விடுவதுதானே? புறப்படுவோம்.

(இருவரும் செல்கிறார்கள்.)

## வழிநடைப் பேச்சு

திண்ணன் : கூத்து எப்படி?

பாவலர் :

வல்லான் வரைந்தவற்றில் பேர் மாற்றி ஊர்மாற்றும்
கல்லான் கலச்சோறும் கல்லேயாம்—சொல்லோ
பிழை! பாட்டில் பின்னடி முன்னடி! என்னை
அழைத்ததால் கண் விழித்தேன் அங்கு!

திண்ணன் : அவ்வளவுதானு! நீர் வீடு சேர்ந்தவுடன் ஊரார் சேர்ந்து உம்மை ஒரு கேள்வி கேட்க எண்ணி யிருக்கின்ருர்கள். அக் கேள்வி என்ன தெரியுமா? நீர் எதற்காக இரவில் வீடு தங்குவதில்லை? என்பதே.

இந்த கேள்விக்கு நீவீர் தக்கவிடை கூறவில்லை யானுல் தண்டனை கிடைக்கும்.

பாவலர் :

கூடட்டும் கேட்கட்டும் குற்றமிருந் தால்என்னைச்
சாடட்டும் தண்டிக்கட்டும்.

(போகின்ருர்கள்)

## காட்சி—இரண்டு

இடம் : ஷெ நயினுர் கோயிலை அடுத்த காடடர்ந்த குடி என்னும் சிற்றூரில் பாவலர் வீடு.

காலம் : காலை பத்து மணி.

உறுப்பினர் : ஊரார், பாவலர் வீட்டார்.

காட்சித் தலைப்பு :

### வேண்டும், மனைக்கு விளக்கு

நிகழ்ச்சி : வீட்டினரும் ஊராரும் உட்கார்ந்திருக்கின்ருர்கள்; பாவலர் நிற்கின்ருர்.

நாட்டாண்மைக்காரர் : நீவீர் வீட்டுக்கொரு பிள்ளை, பெற்ரேர் உள்ளத்தை வாட்டுகின்றீர்; எந் நேரமும்

வெளியில் போய் விடுகின்றீர். இரவில் வீட்டுக்கு வருவதேயில்லை. இதற்கென்ன காரணம் கூறுகின்றீர்.

பாவலர் :

கண்ணுமில்லை, கைக்குத் துணையாய்க் கடமைசெயும்
பெண்ணுமில்லை, பெற்றோர்க்குத் தொல்லைதரும்.
எண்ணமில்லை,
ஊராரோ என் இளைய உள்ளம் உணரவில்லை,
யாரோடு போராடு வேன்.

நாட் : உம் திருமணம் குறித்து நீர் யாரோடும் போராட முடியாது. நீர், ஓர் கவிஞராயினும் கள்ளரே! கள்ளர்க்கு இருக்க வேண்டிய ஒழுக்கம் கடுகளவும் உம்மிடம் இல்லை.

முன்னெல்லாம் மன்னர் இருந்தார். இப்போது இல்லை.

படையில்லை, படையாட்சியில்லை. நிலைமை இல்லா திருந்தும் தலைவர் நமக்கில்லை. இருந்தால் அவரிடத்தில் நல்ல எண்ணமில்லை. கல்வி கற்க வாய்ப்பில்லை.

கழனியில்லை, உழவுமில்லை; உயிர்வாழ ஒருவழிதான் கண்டோம்—கையாண்டோம்.

நீவீர் இந்நாள் வரைக்கும் எத்தனை முறை எவரெவர் பொருளை பறித்தீர்? இல்லை. எவர் உமக்கு பெண் தருவார்.

பாவலர் :

அன்னை யுடைமை; அழியாத் தமிழ்ச் சொற்கள்!
அன்னவற்றை அள்ளி என் பாட் டாக்குவேன்—என்
புகழைத்
தாண்டும் ஒரு கள்ளன் எங்குள்ளான் சாற்றுவீர்?
வேண்டும் மனைக்கு விளக்கு.

நாட் : கவித்தொழில், கள்ளர் தொழிலாகாது. ஒன்பது நாள் தவணைத் தந்தோம். ஒருமுறையாவது தொழில் செய்து காட்ட வேண்டும்.

நம் தொழில் ஒழுக்கமற்றதாயிருக்கலாம். ஆயினும் பழக்கம் பழுதாகக் கூடாது. (கூட்டம் முடிந்தது. அவரவர் வீடு சென்றூர்கள்)

## காட்சி—மூன்று

இடம்: ஷியூர் ஆலின் அடி

காலம்: முதுமாலே

உறுப்பினர்: பாவலர் நெஞ்சு

### காட்சித் தலைப்பு:

### நெஞ்சே வா

பாவலர் :

பூவடியால் மைந்தார் புலன் கலக்கும் இந்த ஊர்த்
தேவடியா ளுக்களிப்பார் செல்வத்தைத்—தேவடியாள்
எட்டி ஒரு பக்கம் இடுவாள் அதைப்பறிப்பேன்
கட்டிற்கீழ் நெஞ்சே கவிழ்.

(பேசுகின்றூர்)

## காட்சி—நான்கு

இடம்: ஷியூர் தேவடியாள் வீடு

காலம்: இரவு

உறுப்பினர்: தேவடியாள், பாவலர்

### காட்சித் தலைப்பு:

### பார்ப்பனைப் பாரா என் கண்

நிகழ்ச்சி: தேவடியாள் சிவபூசை முடித்துத் திருப்பூவண நாதர் மேல் பாடத் தொடங்கினுள்,

திருப்பூ வண நாதா தேவர் அடியார்
கருப்பூ வணந்தந்த கன்னி—கருத்தில் உன்தாள்
சேர்ப்பாரைப் பார்ப்பேன், சிவம் பார்ப்பேன்...

நின்று விடுகிறது வெண்பா. முடிக்கச்சொல் தேடுகின்ருள். அதே நேரம் கட்டிலின் கீழிருந்து ஒருகுரல்.

...ஊர்த்திருடும்
பார்ப்பானைப் பாரா என் கண்.

என வெண்பாவை முடிக்கக் கேட்ட தேவடியாள் உவப்பால் துள்ளுகின்ருள்.

தேவடியாள்:— (கட்டிலின் கீழுள்ள பாவலரைத் தொட்டிழுத்து) இப்படி ஒரு பாவலர் இருந்தாரா? நீவீர் கட்டிலின் கீழ்க் கவிழ்ந்து படுத்துப் பதுங்கியது எதற்கு?

பாவலர்:

பொருள்வேண்டு மென்றுரைத்தார் ஊர்ப்பொது வாளர்
திருடத்தான் சேர்ந்திருந்தேன் இங்கு.

தேவடியாள்: திருடவில்லையே

பாவலர்:

அரிதில் அரிது திருடல், அதுவும்
தெரிதற் கரியதாய ஒன்று.

தேவடியாள்: ஊர்ப் பொதுவாளர் பொருள் கேட்டார். பெரும் பொருள் தருகின்றேன். அவரிடம் கொண்டு போய்ப் போட்டுவிட்டு வந்துவிடுங்கள். என் காதல் நோய்க்கு மருந்து தந்து விடுங்கள்.

பாவலர்:

அமிழ்துக்கும் கண்டுக்கும் தேனுக்கும் மேலாம்
தமிழுக்குத் தொண்டுசெய்வோம்வாடி! தமிழ்த்தாய்
ஆரியத்தால் சாகையிலே காதலொன்ரு? ஆருயிராம்
காரியத்தில் கண்ணு யிரு!

தவடியாள்: தமிழுக்குத் தொண்டு செய்வோம்.

(பாவலார் பெரும் பொருளோடு செல்கின்ருர்)

★